# உங்களது கருத்துகளை
# எமக்கு அறிவிக்கவும

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்டங்களை திருத்தம் செய்வதற்கு பிரேரணைகளை கோருதல்

252 ஆவது அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டம், 255 ஆவது அதிகாரமான நகர சபை கட்டளைச் சட்டம், 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் என்பவற்றை மீளாய்வு செய்து அதற்கு திருத்தங்களை பரிந்துரை செய்யும் பொருட்டு, கௌரவ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா அவர்களால் சட்டத்தரணி சாலிய பீரிஸ் அவர்களின் தலைமைத்துவத்தில் குழுவொன்றை நியமனம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த குழுவிடம் மேற்படி சட்டங்களை திருத்தம் செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் தமது எழுத்திலான பிரேரணைகளை சமர்ப்பிக்கும் படி எல்லா அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் பொது மக்களிடம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. தெரிவு செய்து நியமனம் செய்கின்ற பிரதிநிதிகளுக்கு உள்ள ஒழுக்காற்று நடைமுறைகள்
2. நிதி நடவடிக்கைகள் மற்றும் வருமான உற்பத்தி
3. சுற்றாடல் மற்றும் பொது சுகாதாரம்
4. பொது மக்கள் உபயோக சேவை
5. நிலையான குழுக்களுக்கு பிரசைகளின் பங்களிப்பு
6. பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அரச மற்றும் தனியார் துறையின் பங்குடமை
7. பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி உள்ளூராட்சி நிறுவனங்களில் ஊழலை இல்லாதொழிப்பதற்கான நடைமுறை
8. உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சட்டங்களை ஒருங்கிணைத்தல்
9. உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்கள், கடமைப்பொறுப்புகள் மற்றும் செயற்பாடு
10. பிரதேச பொருளாதார அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி திட்டம்
11. பிழைகள் மற்றும் அதற்கு தண்டனை வழங்கும் நடைமுறைகள்
12. ஏனைய பிரேரணைகள்

பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய ஒழுங்குமுறை

* பல தலைப்புகளின் கீழ் பிரேரணைகளை சமர்ப்பிக்கப்படுவதாயின், அதற்கு வெவ்வேறாக தாள்களை பயன்படுத்தவும்.
* ஒரு தாளில் ஒரு பக்கத்தை மட்டும் பயன்படுத்தவும்.
* சுருக்கமாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் உங்களது பிரேரணைகளை சமர்ப்பிக்கவும்.
* கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்டங்களை திருத்தம் செய்வதற்கான பிரேரணைகள் என்று குறிப்பிடுதல் வேண்டும்.
* எல்லா பிரேரணைகளையும் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ மின் அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

எச்.ரீ.கமல் பத்மசிறி
செயலாளர்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
இலக்கம் 330, யூனியன் பிளேஸ்இ, கொழும்பு 02.

legal@pclg.gov.lk

011 2302720